## பெருநகர சென்னை மாநகராட்சி
## செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 30** **நாள்:05.03.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட தனியார் கல்வி நிறுவன கட்டிடங்கள் மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவன கட்டிடங்கள் மீது சொத்துவரி விதிக்க சட்ட திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30 நாட்களுக்கு பின்னர் சொத்து வரிவிதிப்பு மேற்கொள்வது இறுதி முடிவு செய்யப்படும். வரிவிதிப்பு குறித்து ஆட்சேபணைகள் ஏதுமிருப்பின் அதனை குறிப்பிட்ட நாட்களுக்குள், எழுத்து மூலமாக தெரிவிக்கலாம் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

* * * * * * * * * *

சென்னை மாநகர முனிசிபல் சட்டம், 1919, பிரிவு 100ன்படி, நியாயமான வருடாந்திர வாடகையின் அடிப்படையில், சென்னை மாநகராட்சியால் சொத்து வரியானது விதிக்கப்படுகிறது. வரிவிதிப்பு பிரிவு 3(3)ன்படி, மன்றத்தின் வழிகாட்டுதலின்படி, சொத்து வரியினை நிர்ணயம் செய்ய வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் (இரண்டாம் திருத்தம்) சட்டம்–2018, (2018, தமிழ்நாடு சட்டம் 6)–ல், சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம், 1919, பிரிவு 101 (c)–க்கு கீழ்கண்டவாறு சட்டத் திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது.

**AMENDMENTS TO THE CHENNAI CITY MUNICIPAL CORPORATION ACT, 1919 .**

2.In Section 101 of the Chennai City Municipal Corporation Act, 1919,-

(1) for clause (c), the following clause shall be substituted, namely :-

" (c) buildings used for educational purpose including hostels and libraries, run by the Government or corporation or any other local authority or institutions aided by the Government and buildings used for charitable purpose of sheltering the destitute or animals and orphanages, homes and schools for the deaf and dumb, asylum for the aged and fallen women and such similar institutions run purely on philanthropic lines as are approved by the council:

Provided that the buildings used for educational purpose by the Government aided institutions for conducting self-financing courses shall be subject to levy of property tax ; ":

(2) in the proviso, for the expression "clauses (a),(c) and (e)", the expression "clauses (a) and (e)" shall be substituted.

மேற்படி சட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் மீது சொத்து வரி விதிக்கப்பட வேண்டும் மற்றும் அரசின் உதவி பெற்று செயல்பட்டு வரும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்தி வருமாயின் அக்கட்டிடங்கள் மீது சொத்து வரி விதிக்கப்பட வேண்டும்.

2..

இது தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி சிறப்பு அதிகாரி/மன்றத் தீர்மானம் எண்.190/2018, நாள் 21.02.2018ல்,

- சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம், 1919, பிரிவு 101 (C)–ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு, சொத்து வரியிலிருந்து விலக்களிக்கவும்,
- சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம், 1919, பிரிவு 101 (C)-ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் அனைத்திற்கும் சொத்து வரி விதிக்கவும்,
- சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம், 1919, பிரிவு 101 (C)-ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, கல்வி பயன்பாட்டிற்காக அரசின் உதவி பெற்று நடத்தப்படும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்தி வரும்பட்சத்தில் அந்நிறுவனங்களின் கட்டிடங்களுக்கு சொத்து வரி விதிக்கவும்,
- தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம்– 1994, பிரிவு – 172 (1)–ன்படி, குடியிருப்பு கட்டிடங்களுக்கு விதிக்கப்படும் அடிப்படை விகித சொத்து வரியுடன் 60% மேல் வரியினை (Surcharge) சேர்த்து விதிப்பது போல, கல்வி பயன்பாட்டிற்கான அனைத்து கட்டிடங்கள் மற்றும் கல்வி பயன்பாட்டிற்காக அரசின் உதவி பெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் நிறுவனங்களின் கட்டிடங்கள் ஆகியவற்றின் மீது சொத்து வரியாக விதிக்கவும்,
- சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம், 1919, பிரிவு 101 (C)-ற்கு திருத்தம் வெளியிடப்பட்டுள்ள காலமான II/2017–2018 லிருந்து, மேற்படி கட்டிடங்களுக்கு சொத்து வரி விதிக்கவும்,
- சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம், 1919, பிரிவு 98–Aன்படி, ஆட்சேபணைகளை அளிப்பதற்காக அரசிதழ் மற்றும் செய்தித்தாள்களில் அறிவிப்புகள் வெளியிடுவதற்கும், அனுமதி அளித்துள்ளது.

இதன்படி, சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம், 1919, பிரிவு 98–Aன் படி, மேற்கண்ட முறையில் சொத்து வரி விதிப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள விவரம் அறிவிப்பு செய்யப்படுகிறது. இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30 நாட்களுக்கு பின்னர், சொத்து வரி விதிப்பினை மேற்கொள்வது குறித்து இறுதி செய்யப்படும்.

எனவே, மேற்குறிப்பிட்ட சொத்து வரி விதிப்பு குறித்து ஆட்சேபணைகள் ஏதுமிருப்பின், அதனை குறிப்பிட்ட நாட்களுக்குள், எழுத்து மூலமாக ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, ரிப்பன் கட்டிடம், சென்னை–600 003 என்ற முகவரிக்கு தெரிவிக்கலாம் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**